செ.வெ.எண்:21 நாள்:12.04.2018

# அரியலூர் மாவட்டம், இராங்கியம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் **புகைப்படக்கண்காட்சி** (11.04.2018) அன்று நடைபெற்றதை, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பார்வையிட்டார்கள்.

இப்புகைப்படக்கண்காட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், அம்மா இருசக்கர வாகனத் திட்டம், வண்டல் மண் எடுக்கும் திட்டம், சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சார்பாக இ - பொது சேவை மையங்களின் செயல்பாடு பற்றிய புகைப்படங்கள் மற்றும் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன.

மேலும், விலையில்லா கறவைப் பசுக்கள், விலையில்லா வெள்ளாடுகள், மற்றும் கால்நடைகளுக்கு குறைந்த விலையில் தீவனப்புல், முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, சத்துணவுத் திட்டத்தின் மூலம் சத்துமாவு உருண்டை வழங்குதல், திருமண உதவி மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்குதல், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், மாணவ, மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை, விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டிகள், சீருடைகள், போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் பற்றிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை 700-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இப்புகைப்படக்கண்காட்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (மு.கூ.பொ) க.சரவணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) ச.சிவக்குமார் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் பார்வையிட்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**